V11Acc www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu 1 1 1 8 6

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்

முதல் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

-----

# வகுப்பு 11

காலஅளவு: 3.00 மணிநேரம் | கணக்குப்பதிவியல் | மதிப்பெண்கள்: 90

## பகுதி - அ

**20×1=20**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.**

1) நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
அ) கடனீந்தோர் ஆ) பணியாளர் இ) வாடிக்கையாளர் ஈ) அரசு

2) இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
அ) இந்திய மையவங்கி
ஆ) உச்ச நீதிமன்றம்
இ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

3) ஒரு நிறுவனத்தின் சொத்துகள் மதிப்பு ரூ.100000 மற்றும் அதன் பொறுப்புகள் ரூ.60000 எனில் அந்நிறுவனத்தின் முதல் ...........
அ) ரூ.160000 ஆ) ரூ.60000 இ) ரூ.100000 ஈ) ரூ.40000

4) கு.ப.எ என்பது
அ) பேரேட்டு பக்க எண் ஆ) குறிப்பேட்டு பக்க எண்
இ) சான்று சீட்டு எண் ஈ) ஆணை எண்

5) இருப்பாய்வில் பற்றுப்பத்தியின் மொத்தமும் வரவுப்பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு
அ) வியாபார கணக்கு ஆ) வேறுபாட்டு கணக்கு
இ) அனாமத்து கணக்கு ஈ) இதர கணக்கு

6) நிலைச் சொத்துகள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்ய வேண்டிய ஏடு
அ) கொள்முதல் ஏடு ஆ) விற்பனை ஏடு
இ) கொள்முதல் திருப்ப ஏடு ஈ) உரிய குறிப்பேடு

7) தள்ளுபடி, ரொக்கம் மற்றும் வங்கி பத்திகளுடைய ரொக்க ஏட்டை இவ்வாறு அழைக்கலாம்
அ) சாதாரண ரொக்க ஏடு ஆ) இருபத்தி ரொக்க ஏடு
இ) முப்பத்தி ரொக்க ஏடு ஈ) சில்லறை ரொக்க ஏடு

8) எந்த செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்?
அ) தபால்செலவு மற்றும் பயணச் செலவுகள் ஆ) மேலாளரின் ஊதியம்
இ) அறைகலன் மற்றும் பொருத்துகை வாங்க ஈ) மூலப் பொருட்கள் வாங்க

9) ரொக்க ஏட்டின்படி இருப்பு ரூ.2000 வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக் கட்டணம் ரூ.50 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை எனில் வங்கி அறிக்கையின் படி இருப்பு என்ன?
அ) ரூ.1950 வரவு இருப்பு ஆ) 1950 பற்று இருப்பு
இ) ரூ. 2050 பற்று இருப்பு ஈ) ரூ.2050 வரவு இருப்பு

10) விதிப்பிழை எழுதுவது
அ) ஒரு நடவடிக்கை முழுவதுமத விடுபடும் போது
ஆ) ஒரு நடவடிக்கை பகுதி விடுபடும் போது
இ) முதலினம் மற்றும் வருவாயினத்தை வேறுபடுத்தாத போது
ஈ) பேரேட்டில் தவறாக எடுத்து எழுதுதல் மற்றும் தவறாகக் கூட்டும்போது

11) கொள்முதல் ஏட்டின் மொத்தத்தொகை அதிகமாக கூட்டப்பட்டுள்ளது. இப்பிழையைத் திருத்தம் செய்யும்போது கீழ்க்கண்டவற்றில் எந்தக் கணக்கை பற்று வைக்க வேண்டும்?
அ) கொள்முதல் கணக்கு ஆ) அனாமத்துக்கணக்கு
இ) கடனீந்தோர் கணக்கு ஈ) வேறகண்டது ஏதும் இல்லை

12) குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானத் தொகையானது.
அ) அனைத்து ஆண்டுகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும்
ஆ) ஆண்டு தோறும் குறையும்
இ) ஆண்டு தோறும் அதிகரிக்கும்
ஈ) மேற்கூறியவற்றில் ஏதுவுமில்லை

13) ஒரு சொத்து எதன் காரணமாக வழக்கொழிவு அடைகிறது?
அ) காலப்போக்கு ஆ) தேய்வு மற்றும் உராய்வு
இ) தொழில்நுட்ப மாற்றங்கள் ஈ) மேற்கூறியவற்றில் ஏதுமில்லை

14) புதிதாக நிறுவப்பட்ட இயந்திரத்தினைச் சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்குச் செய்த செலவு ரூ.20000.
அ) தொடக்கச் செலவு ஆ) வருவாயினச் செலவு
இ) முதலினச் செலவு ஈ) நீள்பயன் வருவாயினச் செலவு

15) நடைமுறை முதலை அதிகரிப்பதற்காக இந்திய தொழிற்வளர்ச்சி வங்கியிடம் பெற்ற நடுத்தர காலக் கடன் தொகை
அ) முதலினச் செலவுகள் ஆ) வருவாயினச் செலவுகள்
இ) வருவாயின வரவுகள் ஈ) முதலின வரவுகள்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



16) வங்கி மேல்வரைப்பற்று எதில் காண்பிக்கப்படும்.
அ) வியாபாரக் கணக்கில் ஆ) இலாபநட்டக் கணக்கில்
இ) கடன் பக்கத்தில் ஈ) சொத்து பக்கத்தில்

17) பின்வருவனவற்றில் எது நடப்புச் சொத்துகளில் சேராதது?
அ) ரொக்கம் ஆ) சரக்கிருப்பு
இ) அறைகலன் ஈ) முன்கூட்டிச் செலுத்திய செலவு

18) முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி தோன்றுவது
அ) இலாப நட்டக் கணக்கின் வரவு பக்கம்
ஆ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம்
இ) மேற்கண்ட இரண்டிலும்
ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

19) கணக்கியல் மென்பொருள் என்பது இதற்கு உதாரணம்
அ) அமைப்பு மென்பொருள் ஆ) சொல்பாட்டு மென்பொருள்
இ) பயன்பாட்டு மென்பொருள் ஈ) இயக்க முறைமை

20) TALLY என்பது இதற்கு உதராணமாக இருக்கிறது.
அ) உருவாக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்
ஆ) அயுத்த கணக்கியல் மென்பொருள்
இ) உள்கட்டமைக்கப்பட்ட மென்பொருள்
ஈ) திருந்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

## பகுதி - ஆ

**7×2=14**

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். கேள்வி எண் 30க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

21) கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?
22) நிலைத்தன்மை மரபு குறித்து சிறுகுறிப்பு வரைக.
23) பேரேடு என்றால் என்ன?
24) இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?
25) வரவு குறிப்பு என்றால் என்ன?
26) ரொக்க தள்ளுபடி என்றால் என்ன?
27) வங்கி சரிக்கட்டும் பட்டியல் என்றால் என்ன?
28) இருப்பாய்வு தயாரிக்கும் முன் கீழ்க்கண்ட பிழைகள் கண்டறியப்பட்டன அவற்றை திருத்தவும்.
அ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ரூ.500 குறைவாக கூட்டப்பட்டுள்ளது.
ஆ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ரூ.600 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது.
29) கணினி என்றால் என்ன?
30) கொடுபட வேண்டிய சம்பளம் ரூ.300 சரிக்கட்டு பதிவு தருக.

## பகுதி - இ

**7×3=21**

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். கேள்வி எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

31) கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக
32) பணம் சாா்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும். விவரி.
33) இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.
34) பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கைத் தயாரிக்கவும்

| 2016 | | ரூ. |
|---|---|---|
| ஜனவரி 1 | கையில் உள்ள அறைகலன் | 2000 |
| 1 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 4000 |
| 30 | அறைகலன் விற்றது. | 400 |

35) கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்படிகள் இருப்பாய்வின் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப்பத்தியில் இடம்பெறுமா எனக்காட்டுக.
1) கொள்முதல் 2) முதல் 3) விற்பனை 4) எடுப்புகள்
5) வட்டிப்பெற்றது 6) வாராக்கடன்
36) பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமாா் என்பவரின் 2016 டிசம்பர் 31-ம் நாளுக்குரிய வங்கி சரிக்கட்டும் பட்டியலை தயாா்செய்க.
அ) ரொக்க ஏட்டின்படி இருப்பு ரூ.7130
ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ரூ.1000
இ) வாடிக்கையாளா் நேரடியாக வங்கியில் செலுத்தியது ரூ.800
37) இருப்பாய்வு வெளிக்காட்டும் பிழைகள் யாவை?
38) ஒரு நிறுமம் ரூ.50000 மதிப்புள்ள கட்டடம் ஒன்றை வாங்கியது கட்டடத்தின் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள். அதன் இறுதி மதிப்பு ரூ.5000 நேர்க்கோட்டு முறையில் தேய்மானத்தொகை மற்றும் தேய்மான விகிதம் கணக்கிடுக.
39) பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருள்கள் யாவை?
40) சஞ்சயின் ஏடுகளில் 31, டிசம்பர் 2017-ம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்.
தொடக்க சரக்கிருப்பு ரூ.570, கொள்முதல் ரூ.15800
விற்பனை ரூ.26200, கொள்முதல் திருப்பம் ரூ.90
விற்பனை திருப்பம் ரூ.60, இறுதிசரக்கிருப்பு ரூ.860

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



7x5=35

பகுதி - ஈ

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

41) கீழ்கண்ட தகவல்களிலிருந்து 2017 மார்ச் 31, ஆம் நாளன்றைய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயார் செய்து வங்கி அறிக்கையின் படியான இருப்பினைக் கண்டறியவும்.
i) வங்கியில் வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது ரூ.500
ii) விடுத்த காசோலை செலுத்துகைக்கு இதுவரை முன்னிலைப்படுத்தப்படாதது ரூ.1000
iii) வங்கியால் பிடித்தம் செய்யப்பட்ட வட்டி ரூ.100
iv) நிலை அறிவுறுத்தலின் படி வங்கி செலுத்திய வாடகை ரூ.200
v) ரொக்க ஏட்டின்படி இருப்பு ரூ.300

ஜெயசீலி என்னும் தனிவணிகர் ஒரு பலசரக்கு கடையினை நடத்தி வருகிறார் 2018 ஜனவரியில் அக்கடையின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன. அவைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| ஜனவரி | | ரூ. |
|---|---|---|
| 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 80000 |
| 2 | வங்கியில் செலுத்திய ரொக்கம் | 40000 |
| 3 | ரொக்கத்திற்கு கொள்முதல் சொத்து | 5000 |
| 4 | லிப்டன் நிறுவனத்திடமிருந்து சரக்குகளை கடனுக்கு கொள்முதல் செய்தது | 10000 |
| 5 | ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 11000 |

42) கீழ்கண்ட நடவடிக்கைகளுக்கு ரொக்க கணக்கு மற்றும் விற்பனை கணக்கு ஆகியவற்றை தயாரிக்கவும்.

**2017**

அக்டோபர் 10 சரக்குகள் விற்பனை செய்யப்பட்டு காசோலைப் பெறப்பட்டது. ஆனால் வங்கியில் செலுத்தவில்லை ரூ.30000
14 கோபி என்பவருக்கு கடனாக விற்ற சரக்கு ரூ.12000
20 கோபியிடமிருந்து ரொக்கம் பெற்றது ரூ.1200

**(அல்லது)**

பின்வரும் நடவடிக்கைளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.
அ) முருகன் ரூ.80000 பணத்துடன் தொழிலை தொடங்கினார்.
ஆ) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ரூ.30000
இ) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ரூ.5000
ஈ) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது. ரூ.5000
உ) கூடுதல் முதல் இட்டது ரூ.10000

43) சந்திர மோகன் என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்காணும் இருப்புகளைக் கொண்டு 31.3.2017 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயார் செய்க.

| | | | |
|---|---|---|---|
| முதல் | ரூ.124500 | வங்கி மேல்வரைப்பற்று | ரூ.5800 |
| எடுப்புகள் | ரூ.2000 | மகிழ்வுந்து | ரூ.20000 |
| பெற்றகடன் | ரூ.7000 | பொதுச் செலவுகள் | ரூ.2500 |
| விற்பனை | ரூ.53400 | கட்டிடம் | ரூ.110000 |
| கொள்முதல் | ரூ.40000 | சரக்கிருப்பு | ரூ.16200 |

**(அல்லது)**

கணினி அமைப்பின் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சாதனங்களைக் குறிப்பிடுக.

44) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு 2017 ஏப்ரல் மாதத்திற்கான சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு தயார் செய்க.

2017 ஏப்ரல் 1 காஞ்சிபுரம் பிரசாத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது. ஒரு மீட்டர் ரூ.450 வீதம் 100 மீட்டர் சில்க்துணி
10 சென்னை இரத்தினத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது. ஒரு மீட்டர் ரூ.490 வீதம் 60 மீட்டர் சில்க்துணி
18 நாதன் நிறுவனம் நம்மிடமிருந்து கடனுக்கு வாங்கியது ஒரு மீட்டர் ரூ.510 வீதம் 100 மீட்டர் சில்க் துணி
20 மதுரை ஹரிராம் துணியத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது. கட்டு ஒன்று ரூ.730 வீதம் 50 கட்டுகள் காடாத் துணி

**(அல்லது)**

குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

45) 2017 ஏப்ரல் மாதத்திற்கான பின்வரும் நடவடிக்கைகளை பிரதீப் என்பவரின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதியவும்.

| ஏப்ரல் | | ரூ. |
|---|---|---|
| 1 | வணிகம் ரொக்கத்துடன் துவங்கியது | 27000 |
| 5 | ரொக்கத்திற்கு சரக்குகள் வாங்கியது | 6000 |
| 10 | ரொக்கத்திற்கு சரக்குகள் விற்றது | 11000 |

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu




| | | |
|---|---|---|
| | | 5000 |
| 13 | ரொக்கம் வங்கியில் செலுத்தியது | 9000 |
| 14 | சங்கீதாவிற்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 13000 |
| 17 | பிரீத்தி என்பவருக்கு கடனாக சரக்கு விற்றது | 200 |
| 21 | ரொக்கம் செலுத்தி எழுதுபொருள் வாங்கியது | 14000 |
| 25 | முருகனுக்கு ரொக்கம் செலுத்தியது | 700 |
| 26 | ரொக்கமாக கழிவு கொடுத்தது | 4000 |
| 29 | அலுவலக தேவைக்காக வங்கியிலிருந்து எடுத்தது | |

**(அல்லது)**

கீழ்க்காணும் பதிவுகளை திருத்தம் செய்யவும்

| | | |
|---|---|---|
| அ) குமணன் க/கு பற்று | 10000 | |
| ரொக்க க/கு | | 10000 |
| (குமணனுக்கு சம்பளம் செலுத்தியது) | | |
| ஆ) செங்குட்டு வன் க/கு பற்று | 6000 | |
| ரொக்க க/கு | | 6000 |
| (செங்குட்டுவனுக்கு வாடகை செலுத்தியது) | | |
| இ) ரொக்க க/கு பற்று | 2000 | |
| விற்பனை க/கு | | 2000 |
| (ரொக்கத்திற்கு அறைகலன் விற்றது) | | |
| ஈ) ரொக்க க/கு பற்று | 10000 | |
| குமாரராசா க/கு | | 10000 |
| (குமாரராசாவுக்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது) | | |
| உ) மணிமாறன் க/கு பற்று | 1000 | |
| கொள்முதல் க/கு | | 1000 |
| (சொந்த உபயோகத்திற்கு சரக்கு எடுக்கப்பட்டது) | | |

46) பின்வரும் தகவல்களிலிருந்து முன் பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| 2017 | | | ரூ. |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | சில்லறைச் செலவுகளுக்காக ரொக்க பெற்றது | 500 |
| | 2 | பயணச் செலவுக்கு கொடுத்தது | 5 |
| | | வண்டிக் கட்டணம் கொடுத்தது | 12 |
| | 3 | தபால் செலவு செய்தது | 15 |
| | | தற்காலிக வேலையாட்களுக்கு கூலி கொடுத்தது | 66 |
| | 4 | எழுதுபொருள் வாங்கியது | 134 |
| | | போக்குவரத்து செலவுக்கு கொடுத்தது | 18 |
| | 5 | பழுதுபார்ப்பு செலவு செய்தது | 65 |
| | | பேருந்து கட்டணம் செலுத்தியது | 11 |
| | | வண்டிக் கட்டணம் கொடுத்தது | 24 |

**(அல்லது)**

பின்வரும் நடவடிக்கைகளை முதலினம் மற்றும் வருவாயினமாக வகைப்படுத்தவும்.

i) சரக்கு விற்பனை வாயிலாகப் பெற்றது ரூ.75000
ii) வங்கியிடமிருந்து பெற்ற கடன் ரூ.250000
iii) முதலீடு விற்பனைச் செய்தது ரூ.120000
iv) கழிவு பெற்றது ரூ.30000
v) புதிய இயந்திரம் நிறுவுவதற்கான கூலி செலுத்தியது ரூ.1400

47) கணேஷ் என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து வியாபார இலாபநட்ட கணக்கு தயாரிக்கவும்.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| சரக்கிருப்பு 1.1.2017 | 8000 | வாராக்கடன் | 1200 |
| கொள்முதல் | 22000 | வியாபார செலவுகள் | 1200 |
| விற்பனை | 42000 | அளித்த தள்ளுபடி | 600 |
| கொள்முதல் மீதான செலவு | 2500 | கழிவு கொடுத்தது | 1100 |
| நீதிசார் செலவுகள் | 3500 | விற்பனை செலவுகள் | 600 |
| விற்பனை மீதான செலவுகள் | 1000 | பழுதுபார்ப்பு செலவுகள் | 600 |

2017 டிசம்பர் 31 அன்றைய இறுதிச்சரக்கிருப்பின் மதிப்பு ரூ.4500

**(அல்லது)**

வியாபாரி ஒருவரின் 31.12.2016 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.50000 சரிக்கட்டுதல்கள்

அ) வாராக்கடன் ரூ.1000 போக்கெழுதவும்.
ஆ) 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கவும்
இ) 2% கடனாளிகள் மீது தள்ளுபடி ஒதுக்கு உருவாக்கவும்

இவ்விவரம் வியாபாரியின் இலாபநட்டக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

- - - - - - -

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com